www.tamilarangam.net




# இணைந்தோம்...! இனி வெல்வோம்!!

"விடுதலை எங்கள் பிறப்புரிமை! பற்றி எரியும் எங்கள் தாயக வீதிகளில் ஆயுதமேந்தி அணிவகுக்கிறோம். சிறைகள் தகரும்! விலங்குகள் நொறுங்கும்! எதிரிகள் மாள்வர்! ஈழம் வெல்லும்!''

—ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தளபதி பத்மநாபாவை சந்திக்கச் சென்றபோது மேற்கண்ட 'சூளுரை' வாசகங்கள் பளிச்சென மின்னின.

தமிழ் ராணுவ தளபதிகள் ஒரே அணியில் இணைந்துவிட்ட மகிழ்ச்சிகரமான செய்திக்கு பிறகு தளபதி பத்மநாபாவை 'தேவி' நிருபர் சந்தித்தார்.

ஆயுதமேந்தியதால் காய்த்துப்போன கரங்கள், காடுமலை என்று சுற்றியதால் கறுத்துப்போன மேனி, எதற்கும் தயாராக இருக்கும் வைரம் பாய்ந்த மனம், ஈழ விடுதலை ஒன்றைத் தவிர மாற்று சுகத்தை தேடாத—விரும்பாத கண்கள்!

சுற்றிலும் ஏங்கல்ஸ், மார்க்ஸ், லெனின், ஸ்டாலின் சுவர்களில் நிறைந்திருக்க பத்மநாபா தயக்கமில்லாத உறுதியான வார்த்தைகளால் தன் கருத்துக்களை தெளிவுபடச் சொல்லத் தொடங்கினார்:

ஜெயவர்த்தனே சொல்லும் திட்டம் எதுவும் உருப்படியானவை அல்ல. உலக நாடுகளை ஏமாற்றுவதற்காக இன்னும் ஒரு நாடகத்தை மேடை ஏற்றப் பார்க்கிறான். தன்னைப் பலப்படுத்திக் கொள்வதற்காக நம்மை தாமதப்படுத்த செய்யும் தந்திரமே புதிய பேச்சு வார்த்தை திட்டம்!

தமிழர்களை ஒழித்து கட்ட அவர்கள் தீர்மானித்திருக்கிறார்கள். இதனால் நாங்கள் போராட்டத்தை தீவிரப்படுத்துகிறோம். ஈழத்திற்கு குறைந்த எந்த தீர்வுக்கும் நாங்கள் தயாரல்ல! ஆயுதம் ஏந்திவிட்டோம். இதுதான் எங்கள் முடிவான முடிவு! என்றார் திரு. பத்மநாபா உணர்ச்சிமிக்க குரலில்.

''பேச்சு வார்த்தை பேச்சு வார்த்தை என்று வருடங்கள் தான் வளர்ந்து கொண்டிருக்கின்றன. ஆனால் தமிழ் ஈழத்தில் நிமிடத்திற்கு நிமிடம் என்ன நடக்கிறது என்பது வெளியுலகுக்கு சரியாக தெரியவில்லை. வீதிகளில், வயல்களில், எங்கள் மக்களின் உடல்கள் ரத்தத்தில் மிதந்து கொண்டிருக்கின்றன. தமிழ்ப் பகுதிக்குள் திட்டமிட்டபடி குடி

**'புதிய சமாதான நாடகத்தை மேடையேற்றப் பார்க்கிறான், ஜெயவர்த்தனே!' என்று சொன்னார், தளபதி பத்மநாபா**

www.tamilarangam.net



யேற்றத்தின் மூலம் 2 லட்சம் சிங்கள காடையர்கள் கடந்த 18 மாதங்களில் குடியேற்றப் பட்டிருக்கிறார்கள். இதுதான் பேச்சு வார்த்தையின் பலனா?''

தமிழர்கள் நிலங்களை இழந்து விட்டால் போராட முடியாது என்று நினைத்து பாலஸ்தீனிய நிலங்களை இஸ்ரேலி யர்கள் கைப்பற்றிய பாணியில் இப்போது கையகப்படுத்தி வருகிறார்கள், 'மொசாத்து'கள் உதவியோடு!

இது நிறைவேறி விடுமானால் அப்பகுதி தமிழ்மக்களுக்கு அது பூகம்ப பொழுதாகத்தான் இருக்கும்.


ஆகவே சிங்கள காடையர்களை சகலவகைகளிலும் சந்திக்கத் தயாராக இருக்கிறோம்! இதில் ஈவு, இரக்கத்திற்கு இடமில்லை. நிற்க நிலமில்லை என்றால் எப்படி எங்கள் நாட்டுக்காக போராட முடியும்? கடுமையான விளைவுகளை ஜெயவர்த்தனே சந்தித்தே ஆக வேண்டும்!'' என்று எச்சரித்தார், பத்மநாபா.

எங்கள் இயக்கம் எதிரிக்கு தலைமறைவாகவும் மக்களுக்கு பகிரங்கமாகவும் இருக்கும். உயரத் தூக்கிய ஆயுதத்தை இனி இறக்கப் போவதில்லை. பாசிச வெறிபிடித்த சிங்கள காடையர்களுக்கு முடிவு கட்டும் வரை நாங்கள் ஓயப்போவதில்லை.

இதில் கால தாமதம் செய்யக்கூடாது என்பதினால்தான் நாங்கள் ஒன்றாக இணைந்திருக்கிறோம். தாமதிக்கும் ஒவ்வொரு நிமிடமும் எதிரிக்கு இடம் கொடுப்பதாகிவிடும் என்பதால் ஒன்றுபட்ட போராட்டத்தில் இறங்கி இருக்கிறோம்.

சீனாவில் 3000 சிங்கள காடையர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. பீரங்கிகளால் சுடுவதற்கு அங்கு பயிலுகிறார்கள். தென்னாப்பிரிக்கா, போர்ச்சுகல் ஆகிய நாடுகளிலும் இவர்கள் பயிற்சி பெறுகிறார்கள். இதுமட்டுமல்ல;

தொண்டர் படை என்ற பெயரில் குண்டர்படை ஒன்றும் இலங்கையில் அமைத்து ஈழ நாட்டுக்குள் பயிற்சி அளித்துக் கொண்டிருக்கிறார்கள். 3 வேளையும் நல்ல உணவு. இலவச உடைகள். நாள் தோறும் 30 ரூபாய் கூலி. இந்த குண்டர் படையினர் தான் அண்மையில் திருமலை, வவுனியா, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் தமிழர்களை தாக்கினார்கள். இவர்களுக்கு மொசாத்துகளும், சி. ஐ. ஏ. பிரிவினரும் பயிற்சி அளித்து வருகிறார்கள்.



ஈழத்து போர் முனையில் மக்கள் விடுதலைப் படைவீரர்கள்...

இவர்களின் காட்டு மிராண்டித் தனமான தாக்குதலால் அப்பாவி தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். ஈவு இரக்கமற்ற கொலைபாதகச் செயலை நேரில் பார்த்த சிறுவர் சிறுமியர் சித்தபிரமை அடைந்திருக்கிறார்கள்.

சிங்களர்கள் மீது ராணுவம் தாக்கிவிட்டு அந்த பழியை தமிழர்கள் மீது போட்டது. உலகை ஏமாற்றுவதற்காக அந்த சிங்களர்களை நீர் கொழும்பு அகதி முகாமுக்கு கொண்டு சென்றது. அங்கு அவர்களுக்கு ராஜஉபசாரம் நடந்தது. ஆனால் உண்மையிலேயே அகதிகளான தமிழர்களுக்கு போதுமான உணவு அளிக்கப்படவில்லை. இப்போது ஈழத்தில் பெனிசிலின் மருந்தும் சுத்தமாக கிடையாது. எங்கள் மக்கள் தினம் தினமும் செத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஈழத்தை பாலஸ்தீனமாக



23 சிங்கள ராணுவத்தினரை சுட்டுக்கொன்று வீரமரணம் எய்திய 6 வீரர்களில் ஒருவரான தளபதி சிவா என்ற சிவலிங்கம்.

வும், தமிழ்நாட்டை லெபனான் ஆகவும் மாற்ற சிங்கள அரசு திட்டமிட்டிருக்கிறது. ஆனால் சிங்கள ராணுவத்தினர் மகா கோழைகள். எங்களின் தாக்குதலுக்கு பயந்து அவர்கள் ராணுவத்தை விட்டு ஓடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு தைரியம் அளிப்பதற்காக இலங்கை வானொலியும், ரூபவாகினியும் (டி. வி) தமிழ் விடுதலை படையினர் பரவலாக கொல்லப்பட்டதாக பொய்ச் செய்திகளை பரப்பி வருகின்றன. இதேபோல் தமிழர்களும், முஸ்லிம்களும் மோதிக் கொண்டதாக பொய்களை சொல்லி வருகிறார்கள். முஸ்லிம்களையும், தமிழர்களையும் சிங்கள குண்டர்கள் தாக்கிவிட்டு பழியை இரு சாரார் மீதும் போட்டு விடுகிறார்கள்.

''நான்கு இயக்கங்களும் ஒன்று சேர்ந்துவிட்டதால் சிங்கள ராணுவமும் பலப்படுத்தப்பட்டு நாச வேலைகளில் வேகமாக இருப்பார்கள் அல்லவா?''

''நாங்கள் நான்கு அணியினரும் இணைந்திருப்பதால் சிங்கள ராணுவத்தினர் மத்தியில் பயம் ஏற்பட்டிருப்பதுதான் உண்மை. இதற்காக அவர்கள் சிங்கள ராணுவத்தினருக்கு ஊக்கம் தரும் வகையில் பொய் செய்திகளை பிரசுரித்தும், ஒலிபரப்பியும் வருகிறார்கள். நாங்கள் ஒன்றாக இணைந்திருப்பது எங்கள் மக்களுக்கு ஆத்ம பலத்தை தந்திருக்கிறது. இனி நாங்கள் தாக்குதலை வலுப்படுத்துவோம். சாதாரண அப்பாவி மக்களை இனி அவர்கள் தாக்க முடியாது. இனியும் நாங்கள் பிரிந்திருந்தால் மக்களுக்கு துரோகம் செய்தவர்களாகிவிடுவோம் என்பதால்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இணைந்து இருக்கிறோம்:

இப்போது இலங்கையில் அமெரிக்க தூதரகத்தில் விடுதலைப் போராளிகளை ஒழிப்பதற்காக பயிற்சி அளிக்கப்படுகிறது. உல்லாச விடுதிகளில் சுற்றுலா பயணிகள் மாதிரி தங்கி சி. ஐ. ஏ.க்கள் செயல்படுகிறார்கள்.

சிங்கள ஆர்மி யூனிபார்மில் மொசாத்துகளும் இருக்கிறார்கள். குடிநீர் வடிகால் வாரிய ஊழியர்கள் மாதிரி வந்த சி. ஐ. ஏ. தம்பதிகளைத்தான் நாங்கள் முதலில் கடத்தி பிணைய கைதிகளாக வைத்திருந்தோம்: இந்திய—தமிழக அரசு வேண்டுகோளின் படி அவர்களை விடுதலை செய்ய வேண்டியதாகி விட்டது.

தமிழகத்திற்கு வந்திருந்த இரண்டு மொசாத்துகளை வேதாரணியத்தில் வைத்து பிடித்து தமிழ்நாட்டு போலீசில் ஒப்படைத்து விட்டோம். இப்போது அகதிகளுடன் அகதிகளாக சிங்கள ஒற்றர்கள் தமிழ்நாட்டுக்குள் வந்திருக்கிறார்கள். அவர்களையும் நாங்கள் படம் பிடித்து வைத்திருக்கிறோம்.

பலாலி, குருநகர், ஆனையிரவு, தாளாடி காரைநகர், நாவட்டுகுழி, பருத்திதுறை, வல்வெட்டிதுறை, மட்டகளப்பு, திரிகோணமலை, வவுனியா, கொக்கிளாய் ஆகிய இடங்களில் ராணுவ—போலீஸ் கூட்டு முகாம்கள் இருக்கின்றன. திரிகோணமலையில் மட்டும் 4 முகாம்கள் இருக்கின்றன. இந்த முகாம்களில் 500-லிருந்து 2,000 வரை நவீன ரக ஆயுதங்களுடன் சிங்களர்கள் இருக்கிறார்கள்.

இதைக் கண்டு நாங்கள் பயப்படவில்லை என்பதற்கு ஒரு உதாரணம் சொல்ல விரும்புகிறேன். எங்களுடைய மட்டக்களப்பு ராணுவ பிரிவு தளபதி சிவா என்ற சிவலிங்கம், எங்களுடைய விடுதலைப் படைக்கு ஆட்கள் திரட்டுவதற்காக ரகசிய இடத்தில் முகாமிட்டிருந்தார். தகவல் தெரிந்து சிங்கள போலீஸ் சுற்றி வளைத்துக் கொண்டு விட்டது. இதை அறிந்த சிவா தேர்வுக்கு வந்திருந்த மக்களை பாதுகாப்பாக அனுப்பிவிட்டு கையிலிருந்த ஆயுதங்களுடன் 6 போராளிகளை வைத்துக் கொண்டு சிங்கள போலீசை எதிர்த்தார்: 23 பேரை சுட்டு வீழ்த்தினார். குண்டுகள் தீர்ந்த பிறகுதான் இந்த 6 பேரையும் சுட்டுக் கொல்ல அவர்களால் முடிந்தது. எங்கள் போராளிகள் எவ்வளவு திரமிக்கவர்கள் என்பதைப் பாருங்கள்!

சிங்கள ராணுவத்தினர் எத்தகைய கோழை என்பதற்கு இன்னும் ஒரு சிறு உதாரணம் சொல்ல முடியும். வெளிக்கடை சிறைச்சாலை படுகொலை நடந்ததல்லவா? அப்போது வன்முறை வெறியாட்டத்திற்கு அஞ்சிய மயில்வாகனன் என்ற சிறுவன் படிக்கடியில் மறைந்திருந்தான்:

சமிரத்ன என்ற ஜெயிலர் அந்த சிறுவனின் முடியைப்பற்றி இழுத்து கத்தியால் குரல்வளையை அறுத்து புத்தருக்கு காணிக்கை செலுத்தினான்: இப்படி நிராயுத பாணிகளிடம்தான் அவர்கள் வீரத்தைக் காட்டுவார்கள்!'' என்று சொன்னார் பத்மநாபா:


இவர் தலைமையிலான ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் ராணுவம் மிகுந்த கட்டுக்கோப்பானது: நவீன ரக ஆயுதங்களை இவர்களே தயார் செய்து கொள்கிறார்கள்.

பீரங்கி, ராக்கெட், ஏவுகணைகள், தானியங்கி துப்பாக்கிகள், விமானம் சுடும் பீரங்கிகள் இவைகளை கையாளுவதில் விடுதலை படை அணியினர் அனைவருமே மிகவும் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

எனவே—

விரைவில் தமிழ் ஈழம் அமைவதற்கு இணைந்த நான்கு அணியினருக்கும் தமிழ் மக்களின் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வோம்!

—பேட்டி: பெல்லி.



பயிற்சி காலத்தில்...



வத்தலகுண்டு காவல் நிலையத்துக்குள் இருக்கும் முகம் பார்க்கும் கண்ணாடியில் எழுதப் பட்டிருக்கும் வாசகங்கள்:

''என் உடுப்புக்கு ஏற்றபடி நான் மிடுக்காக உள்ளேனா?''

—பார்த்து ரசித்தவர்:
பி.டி. சிதம்பரசூரியநாராயணன்,
பெரியகுளம்.

www.tamilarangam.net

தமிழீழப் போராட்டத்தில் புதிய திருப்பம்
விடுதலை அமைப்புக்கள் ஒன்றுபட்டன.

ஈழத் தமிழ்பேசும் மக்களின் தேசிய சுதந்திரப் போராட்டத்தைமுன்னெடுப்பதில் ஒன்றுபட்டுச் செயல்ப்பட ஈழத்தேசிய விடுதலை முன்னணியும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் முடிவுசெய்துள்ளன. 1984ம் ஆண்டு ஏப்ரல் மாதம் உருவாக்கப்பட்ட ஈழத்தேசிய விடுதலை முன்னணியானது மூன்று முக்கிய விடுதலை அணிகளின் கூட்டமைப்பாகும். தமிழீழ விடுதலை இயக்கம்(TELO) ஈழப் புரட்சி அமைப்பு(EROS ), ஈழமக்கள் புரட்சிகரவிடுதலை முன்னணி(EPRLF ) ஆகியன இக்கூட்டமைப்பில் அங்கம்வகிக்கின்றன.

புரட்சிகர ஆயுதப்போராட்டப் பாதையை தழுவிக் களத்தில் போராடும் இந்த நான்கு விடுதலை இயக்கங்கள் மத்தியில் ஒருமைப்பாடு ஏற்பட்டமை எமது விடுதலைப் போராட்டத்தில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாகும். ஈழத் தமிழரின் சுதந்திரப் போரில் ஒருதிருப்புமுனையாக அமைந்துள்ள இந்நிகழ்ச்சி புரட்சிகர சக்திகளை ஒன்றிணைத்து ஆயுதப்போராட்டத்தை ஒருமுகப்படுத்தி வலுப்படுத்த வழிகோலியுள்ளது. இராணுவப்பயங்கரவாத அட்டூழியங்களையும், இனக்கொலையையும் எதிர்நோக்கி தாங்கொணாத் துன்பத்தை அனுபவித்துவரும் மக்களுக்கு எமது விடுதலை அணிகள் ஒன்றுபட்டசெய்தி பெருமகிழ்ச்சியையும், நம்பிக்கையையும் அளிப்பதோடு, அவர்களது ஐக்கிய உணர்வையும், விடுதலை உணர்வையும் பலப்படுத்துமென்று கருதுகிறோம்.

தமிழீழ விடுதலைப் புலிகளும், தமிழீழ விடுதலை இயக்கம், ஈழப் புரட்சி அமைப்பு, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஆகியவற்றின் கூட்டமைப்பான ஈழத்தேசிய விடுதலை முன்னணியும் கீழ்க்கண்ட அரசியல்ரீதியான அடிப்படைக் கொள்கைகளில் ஒன்றுபட்டுச் செயல்ப்படத் தீர்மானித்துள்ளன.

(1) ஸ்ரீலங்கா அரசின் ஆதிக்கத்திலிருந்தும், அடக்குமுறையிலிருந்தும் எமது தாயகத்தின் சுதந்திரத்தையும், இறைமையையும்வென்றெடுத்தல்.

(2) இலங்கைவாழ் தமிழ்த்தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டுகின்ற தனியரசைத் தவிர்ந்த வேறெந்த குறைந்தபட்ச சமரசத் திட்டத்தையும் அங்கீகரிப்பதில்லை.

(3) பரந்துபட்ட மக்களின் பங்களிப்போடு பரிணாமம் பெறும் வெகுஜன ஆயுதப்போராட்டத்தை(மக்கள் போராட்டத்தை) எமது போராட்டப் பாதையாகக் கொள்ளுதல்.

(4) தேசிய சுதந்திரப் போராட்டத்தோடு சோசலிச புரட்சியையும் முன்னெடுத்து, சுதந்திரத் தாய்நாட்டில் சோசலிச சமுதாயத்தைக் கட்டியெழுப்புதல்.

(5) உலக ஏகாதிபத்திய, நவகாலனித்துவப் பிடியிலிருந்து எமது தேசத்தை பூரணமாக விடுவித்து, அணிசேராக் கொள்கையைக் கடைப்பிடித்தல்.

தற்போது ஒப்புக்கொள்ளப்பட்ட குறைந்தபட்ச வேலைத்திட்டமாக, முக்கிய அரசியல்ப் பிரச்சனை குறித்து ஒன்றுகூடிக் கலந்தாலோசித்து முடிவெடுப்பதென்வும், ஸ்ரீலங்கா அரசபடைகளுக்கெதிரான எமது ஆயுதப் போராட்ட நடவடிக்கைகளை ஒன்றுபடுத்தி செயல்ப்படுத்துவதெனவும் தீர்மானித்துள்ளோம்.

எமது இந்த ஒருமைப்பாடு விரிவுபட்டு வலுப்பெற ஒத்துழைப்பும் ஆதரவும் தருமாறு எமது மக்களின் விடுதலையில் அபிமானங்கொண்ட சகல தமிழ் மக்களையும் வேண்டிக் கொள்கிறோம்.

வே. பிரபாகரன்.
தலைவர்
தமிழீழ விடுதலைப் புலிகள்

தலைவர்
தமிழீழ விடுதலை இயக்கம்

செயலதிபர்
ஈழமக்கள் புரட்சிகர
விடுதலை முன்னணி

புரட்சிகர நிறைவேற்றுக்குழு
ஈழப் புரட்சி அமைப்பு

ஈழ மக்கள் செய்தித் தொடர்பு நிலைய வெளியீடு
EELAM PEOPLE'S INFORMATION CENTRE PUBLICATION

EPIC, 10 , RUE DES MARTYRS, 75009 , PARIS , FRANCE.
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்